# ஆற்காடு நகராட்சி

2022 ஆகஸ்டு மாதம் 29 ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை 3ல் விதி 2(1) இன்படி **சாதாரணக் கூட்டம்** ஆற்காடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள மன்ற அரங்கில் நடைபெறும்.

குறள் எண். 67) தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

**பொருள்.** ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யும் நல்ல உதவி, அவனைக் கற்றோர் அவையிலே முதன்மை பெற்றவனாக இருக்கச் செய்தலே ஆகும்

## மன்றப்பொருள்

**பொருள் எண்.01)**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜூலை–2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.:– 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மான எண்**.174, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.02)**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூலை–2022 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

**தீர்மான எண்**.175, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.03)**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் கீழ் பயன்பாட்டில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்ட வாகனம் TN73D 7584 மற்றும் TN23S 3645 என்ற இரண்டு லாரிகள் புதுபிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வருவதால் வாகன தகுதி சான்று பெற்று இயக்க வேண்டி 2022–2023ஆம் வருடத்திற்கு காப்பீட்டு சந்தா தொகையினை United India Insurance co. Ltd Ranipet என்ற நிறுவனத்தில் செலுத்துவதற்கு TN73D 7584 வாகனத்திற்கு ரூ.34955/– மற்றும் TN23S 3645 ரூ.31432/–ஆக மொத்த வாகன காப்பீட்டு தொகை ரூ.66,387/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) TN73D 7584 மற்றும் TN23S 3645 என்ற இரண்டு லாரிகள் புதுபிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வருவதால் இதற்கான வாகன காப்பீடு தொகையினை 2022–2023 வருடத்திற்கு செலுத்த வேண்டி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி

நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) வாகன காப்பீடு தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2188/2011/எச்1

**தீர்மான எண்**.176, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.04)

இந்நகராட்சியின் எல்லைக்குப்பட்ட குடியிருப்புகளில் வருகின்ற 75வது சுதந்திர தின விழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டி அரசு முதன்மை செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களின் நே.மு.கடிதம். PR3/9346/2022, Dated. 23.07.2022 நாளில் தெரிவிக்கப்பட்டதின்படி, 13.08.2022 முதல் 15.08.2022 வரை அனைத்து வீடுகளிலும் தேசிய கொடியினை ஏற்ற வேண்டி 10500 எண்ணிக்கையிலான தேசிய கொடியினை விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ள தோராயச் செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வருகின்ற 75வது சுதந்திர தின விழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டி இந்நகராட்சியில் உள்ள குடியிருப்புகளுக்கு தேசிய கொடியினை ஏற்ற வேண்டி மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 10500 எண்ணிக்கையிலான தேசிய கொடியினை வாங்க விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1360/2022/எச்1

**தீர்மான எண்**.177, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.05)

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள 31 மின்கலன் வாகனத்தை ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள 02.06.2022ஆம் நாளில் மன்றப்பொருளில் நகரமன்றத் தலைவர் அவர்களின் செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு முன் அனுமதி பெறப்பட்டு 21.06.2022ஆம் நாளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றமைக்கும் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கம் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை ரூ |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 01 | Green World, Arcot | 2100.00 |
| 02 | The Walajapet Agro Engineering & Service Co-op Centre Ltd, Walajapet | 2200.00 |

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள 31 மின்கலன் வாகனத்தை ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள 02.06.2022ஆம் நாளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வ.எண்.01. Green World, Arcot என்பவரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதினை ஏற்று மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கான உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.975/2022/எச்1

**தீர்மான எண்**.178, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்**.06)

75 வது சுதந்திர தினவிழாவினை 15.08.2022ஆம் நாளில் கொண்டாட வேண்டி 10500 எண்ணிக்கையிலான 18X12 அளவில் தேசிய கொடியினை வாங்க 25.07.2022ஆம் நாளில் ரூ.2.00 இலட்சத்திற்கு நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது. 01.08.2022 ஆம் நாளில் பெறப்பட்ட கீழ் காணும் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | ஒரு கொடியின் விலை |
|---|---|---|
| 01. | Maps Garments, Tirupur | 18.50 |
| 02. | Shine Textile, Tirupur | 18.00 |
| 03. | Print Park, Tirupur | 19.00 |

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) 75வது சுதந்திர தின விழாவினை கொண்டாட வேண்டி குடியிருப்புகளுக்கு 10500 எண்ணிக்கையிலான தேசிய கொடியினை விலைப்புள்ளி கோரப்பட்டதில் வ.எண்.02 Shine Textile, Tirupur விலை குறைவாக அளித்துள்ளதால் இதனை ஏற்று மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1360/2022/எச்1

**தீர்மான எண்**.179, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.07)

இந்நகராட்சியின் எல்லைக்குபட்ட பகுதியில் பொது மக்களுக்கு இடையூராக கேட்பார் இன்றி சுற்றி திரியும் பன்றிகளை அப்புறபடுத்துமாறு பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் 19.07.2022ஆம் நாளில் விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ் காணும் இரு விலைப்புள்ளிகள் 26.07.2022ஆம் நாளில் பெறப்பட்டது. எனவே, இதற்கான ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் (ம) அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிமையாளர்கள் | ஒரு பன்றியை பிடிக்கும் தொகை ரூ. |
|---|---|---|
| 01. | ALL INDIA PIG @ DOG CATCHES, MADURAI (Mr. Saravanan) | 100.00 |
| 02. | ALL INDIA DOG AND PIG CATCHES, MADURAI (Mr. Muthumari) | 70.00 |
| 03. | Tamilnadu Pig catchers, D.No.74/10, Ameen Beeran Darga Street, Arcot. (Mr.J. Saravanan) | 110.00 |

அ.கு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூராக சுற்றித் திரியும் பன்றிகளை பிடிக்க 19.07.2022ஆம் நாளில் விலைப்புள்ளி கோரப்பட்டதற்கு, 26.07.2022ஆம் நாளில் பெறப்பட்ட விலைப்புள்ளியில் ஒரு பன்றியினை பிடித்து நகராட்சி கருவூலகத்தில் செலுத்த அதிகபடியான தொகையினை வ.எண். 03. Tamilnadu Pig Catchers, Arcot (Mr.J. Saravanan) என்பவர் குறிப்பிட்டுள்ளமைக்கு மன்றப்பொருள் எதிர்நேக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1231/2022/எச்1

**தீர்மான எண்**.180, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.08)

இந்நகராட்சியில் வார்டு 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் தெருமின்விளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் மின் பொருட்கள் மற்றும் உதவி மின் பாகங்களின் இருப்பு மிக குறைவான அளவில் இருப்பிலுள்ளதால் தெருமின்விளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி ரூ.9.10 இலட்சம்

மதிப்பீட்டில் மின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் வாங்குவதற்கான மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.181, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.09)**

இந்நகராட்சியில் வார்டு 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் தெருமின்விளக்குகள் இயக்குவதற்கு தானியங்கி சுவிட்சு (Automatic Timer) தேவைப்படுவதால் தெருமின்விளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதீ 65 எண்ணங்கள் முதற்கட்டமாக வாங்குவதற்கு ரூ.9.56 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.182, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.10)**

இந்நகராட்சியில் 15.08.2022 அன்று 75வது சுதந்திர தினவிழா நடைபெற்று முடிந்ததற்கு 200 அழைப்பிதழ்கள் அச்சடிக்க வேண்டி உள்ளூர் விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில் 04.08.2022ம் அன்று கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கம் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தெகை ரூ. |
|---|---|---|
| 1 | ஜெயம் ஆப்செட் பிரிண்டர்ஸ் | 1650/- |
| 2 | மணி பிரஸ், ஆற்காடு | 1900/- |
| 3 | பாரத் பிரிண்டர்ஸ், ஆற்காடு | 1850/- |

அ.கு. 1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜெயம் ஆப்செட் பிரிண்டர்ஸ், ஆற்காடு அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்டுள்ள செலவினம் ரூ.1650/- நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) 15.08.2022 அன்று சுதந்திர தினவிழா முன்னிட்டு மன்றம் ஒப்புதல் எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று அழைப்பிதழ்கள் அச்சடிக்க உத்திரவு வழங்கியதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.0002/சி2/2022

**தீர்மான எண்**.183, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.11)**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளிலுள்ள மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் பழுதடைந்தால் உடனுக்குடன் சரிசெய்திடவும் ஆண்டுபராமரிப்பு பணி 2022-23க்கு பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.184, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.12)**

இந்நகராட்சிக்குட்பட்ட 7 மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள், வேப்பூர் தலைமை நீரேற்று நிலையம் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரில் குளோரினேஷன் கலப்பதற்கு தேவையான Liquid Chlorine திரவ குளோரின் சப்ளை செய்தல் பணியியை மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டு தொகை ரூ.9.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.185, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.13)**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள அனைத்து உயர்கோபுர மின் விளக்குகள் மற்றும் Canter Median விளக்குகள் ஆகியவை பழுதடைந்தால் உடனுக்குடன் சரிசெய்திடவும் 2022-23க்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினத்தொகை ரூ.6.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.186, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.14)**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளிலுள்ள கைபம்புகள் பழுதடைந்தால் உடனுக்குடன் சரிசெய்திடவும் அதற்கான ஆண்டு பராமரிப்பு பணிக்கு 2022-23க்கு பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினத்தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.187, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.15)**

இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வார்டு எண்.1, வரதராஜபெருமாள் பூங்கா (ஜெகன்னாதசுவாமி தெரு)-வில் பூங்கா மேம்படுத்துதல் பணி நடைபெற்று வருகிறது. தற்போது மேற்கண்ட பூங்காவில் கிராவல் மண் நிரப்புதல், மற்றும் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டு தொகை ரூ.7.20 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.188, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.16)**

இந்நகராட்சியில் அலுவலக கட்டிடத்தில் உள்ள நகரமன்ற கூடத்தில் வர்ணம் பூசுதல், A.C (Air Conditioner) பொருத்துதல், மைக் சப்ளை செய்தல், இருக்கை வசதி செய்தல் மற்றும் இதர பழுது பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான தோராய செலவினத் தொகை ரூ.9.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.189, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.17)**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளிலுள்ள சிறுமின்விசை பம்புகள் (Mini Power Pump) பழுதடைந்தால் உடனுக்குடன் சரிசெய்திடவும் அதற்கான ஆண்டு பராமரிப்பு பணி 2022-23-க்கு பணி

மேற்கொள்வதற்கான தோராய செலவினத் தொகை ரூ.9.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.190, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.18)**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளிலுள்ள பகிர்மான குழாய்கள் (Distribution main) பம்பில் மெயின் (Pumping main), வால்வுகள் ஆகியவை பழுதடைந்தால் உடனுக்குடன் சரிசெய்திடவும் அதற்கான ஆண்டு பராமரிப்பு பணி 2022-23-க்கு பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினத் தொகை ரூ.9.80 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.191, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.19)**

இந்நகராட்சிக்குட்பட்ட வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள மோட்டார்கள் மற்றும் அதனை சார்ந்த பாகங்கள் மற்றும் பைப்லைன்கள் ஆகியவற்றில் பழுது ஏற்படாமல் உடனுக்குடன் சரிசெய்திடவும் அதற்கான ஆண்டு பராமரிப்பு பணி 2022-23-க்கு பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினத் தொகை ரூ.9.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.192, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.20)**

இந்நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பிரதான திட்டமான தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்காக பொது சமையல் கூடம் நகராட்சி மனைப்பிரிவில் கட்டப்பட்டு வருகிறது. அந்த கட்டிடத்தில் தற்போது கூடுதல் பணிகளாக ஆழ்துளை கிணறு அமைத்தல், மோட்டார் பொருத்துதல் மற்றும் தண்ணீர் தொட்டி சம்ப் அமைத்தல் மற்றும்இதர பணிகள் மேற்கொள்வதற்கான தோராய செலவினத் தொகை ரூ.3.60 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.193, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.21)**

இந்நகராட்சிக்கு சொந்தமான வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் 300 mm DI பிரதான பைப்லைனில் வார்டு எண்.1 பெரிய அசன்புரா பகுதியிலுள்ள தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிவு 15ன் கீழ் மேற்கண்ட பைப்லைன் உடைப்பினை சரிசெய்தல் பணியினை M/s.K.ராஜாராம் அன்ட் கோர ஒப்பந்ததாரர் மூலம் ரூ.50,000/– செலவினத்தில் குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

**தீர்மான எண்**.194, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.22)**

இந்நகராட்சிக்கு சொந்தமான வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் 300 mm DI பிரதான பைப்லைனில் வார்டு எண்.1 பெரிய அசன்புரா பகுதியிலுள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான வேப்பூர் கால்வாயில் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள சிறுபாலத்தின் அடிபாகத்தில் பைப்லைன் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கண்ட பைப்லைன் உடைப்பினை சரிசெய்தல் பணியினை M/s.K.ராஜாராம் அன்ட் கோ ஒப்பந்ததாரர் மூலம் ரூ.74,000/– செலவினத்தில் குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்**.195, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.23)**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள வரதராஜ பெருமாள் பிரம்மேற்சுவ விழாவை முன்னிட்டு திருத்தேர் செல்லும் சாலைகளில் உள்ள பள்ளம் மேடுகளை சமன்செய்து சிமெண்ட் சாலை பேட்ச் ஒர்க் செய்தல் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கண்ட சிமெண்ட் சாலை பேட்ச் ஒர்க் பணியினை திரு.என்.எழிலன், ஒப்பந்ததாரர் மூலம் பொதுநிதியின் கீழ் ரூ.1,50,000/– செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்**.196, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.24)**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலற்றங்கரையில் மயானக்கொள்ளை திருவிழாவை முன்னிட்டு 01.03.2022 (ம) 02.03.2022 ஆகிய இரண்டு தினங்களுக்கு பொதுமக்களின் தேவைக்காக தற்காலிக தடுப்பிற்கு சுற்றுக் கம்பு கட்டுதல் பணி தற்காலிக கழிவறை அமைத்தல் பணி, வாடகை ஜெனரேட்டர் வசதி ஏற்பாடு செய்தல், மின் விளக்கு

வசதி ஏற்படுத்துதல் பணி, மற்றும் ஆங்காங்கே குடிநீர் தொட்டி அமைத்தல் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கண்ட சிமெண்ட் சாலை பேட்ச் ஒர்க் பணியினை M/s.K.ராஜாராம் அன்ட் கோ, ஒப்பந்ததாரர் மூலம் பொதுநிதியின் கீழ் ரூ.1,35,000/- செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்**.197, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.25)**

இந்நகராட்சிக்குட்பட்ட பெருமாள் கோயில் பம்ப் ஹவுசுக்கு செல்லும் பைப்லைன் கேபிள்கள் வடகிழக்கு பருவமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பெருக்கினால் பாலற்றில் அடித்து செல்லப்பட்டுவிட்டதால் ஏற்கனவே தற்காலிகமாக மின் மயானத்திற்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து புதிதாக பைப்லைன் பதித்து கேபிள்கள் இணைப்பு ஏற்படுத்தி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு இருந்ததை தற்போது மாற்றி குடிநீர் பணியின் அவசர அவசியம் நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மீண்டும் புதிதாக பெருமாள் கோயில் பம்ப் ஹவுசுக்கு பைப்லைன் மற்றும் கேபிள்கள் இணைப்பு பதித்தல் பணியினை குடிநீர் நிதியின் கீழ் ரூ.3,72,815/- செலவினத்தில் திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்**.198, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.26)**

இந்நகராட்சிக்குட்பட்ட TNHB-II ல் கட்டப்பட்டு வரும் RRC (Resource recover centre) கட்டிடத்திற்கு இடைகால தடைவிதிக்கப்பட்டு W.P.No.15044/2022-ன் படி சென்னை உயர்நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை வழங்குவது குறித்து சட்ட கருத்துரு தெரிவிக்க கோரி திரு.பி.ஆனந்த் வழக்கறிஞர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. தற்போது வழக்கறிர் கருத்துரு வழங்கியதற்கு கட்டணம் ரூ.5000/- வழங்ககோரி திரு.பி.ஆனந்த் அவர்கள் கடிதம் அளித்துள்ளார். எனவே, ரூ.5000/-ஐ திரு.பி.ஆனந்த் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.199, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.27)**

1. Resolved that the Municipal Commissioner, Arcot Municipality is authorized to borrow the loan amount of Rs.360.00 lakhs at the flexible interest rate fixed by TUFIDCO Board / Government under " Special Road Programme" Funding Scheme to implement the " Road works" at an Estimated cost of Rs.400.00 lakhs " as per the terms and conditions prescribed by TUFIDCO.

(Rs.. in lakhs)

| Name of the Project | Project Cost | TUFIDCO's LOAN under SRP |
|---|---|---|
| **Package - 1** - Providing Black Top Surface Road to TNHB Phase - II and Providing Black Top Surface Road and Construction of Storm Water Drain with Culvert @ Boopathi Nagar,Vathiyar Govidaraj street,Jaganatha sami street and Providing Black Top Surface Road to Kottai Mettu street. | 200.00 | 180.00 |
| **Package - 2** - Providing Black Top Surface Road and Construction of Storm water Drain with Culvert @ TNHB Phase I, Parthiban Nagar & Dhanapal street. | 200.00 | 180.00 |

2. The Municipal Commissioner, Arcot Municipality be and hereby authorized to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Corporation on the documents to be executed with TUFIDCO on behalf of the Arcot Municipality.

3. Resolved that the ULB account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed in favour of TUFIDCO. This account will be in existence till the time of clearing the loan and other dues under this project to TUFIDCO.

4. Resolved that the Municipal Commissioner be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of principal, interest and other money due for the loan availed for the project proposal to TUFIDCO.

5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Arcot Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the State Government, in the event of default in repayment of principal, interest and other money due to TUFIDCO in respect of loans availed for these projects.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.200, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.28)**

Lr.No.TUFIDCO/SRP/ARCOT/M(B)/2022நாள்.16.08.2022–ல் தெரிவிக்க பட்டுள்ளது இந்நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21ன் கீழ் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு TUFIDCO–விற்கு செலுத்தவேண்டிய நிலுவை Loan தொகை 30.06.2022 வரையிலான காலத்திற்கு ரூ,28,548/–ஐ செலுத்தக்கோரி கடிதம்

வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட Loan payment Due தொகை ரூ.28,548/-ஐ TUFIDCO-விற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.201, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.29)**

இந்நகராட்சியில் SBM Grant 2018-19 ம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.162.00 லட்சத்தில் Bio Mining பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் 02.08.2022 அன்று கோரப்பட்டது. அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் வெளியிட்டதற்கு (Times of India, Theekathir நாள்.21.07.2022-)ல் விளம்பர நிறுவனம் Moulis Advertising service Pvt Ltd -க்கு விளம்பர நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய பில் தொகை ரூ.30,076/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.202, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.30)**

இந்நகராட்சியில் SBM Grant 2018-2019ம் ஆண்டு திட்டத்தின் கீழ் வார்டு எண்.9-ல் கோட்டை தெருவில் மரபு வழி கழிவுகளை அகற்றும் (Biomining) பணிக்கு ரூ.162.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 02.08.2022ம் தேதி (Online மின்னனு ofline open Tender முறையில் மறு ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டது. இதில் online ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறவில்லை மேலும் 1) S R MAN POWER CONSULTANCY , 2) SARAM ENVIRO SERVICES PVT LTD ஆகிய இரண்டு நிறுவனங்கள் Offline-ல் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்திருந்தனர், இப்பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் தொழில்நுட்ப ஆய்வுகள் (Technical Evaluation) மேற்கொண்டதில் 1) S R MAN POWER CONSULTANCY , 2) SARAM ENVIRO SERVICES PVT LTD , ஆகிய இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதனை தொடர்ந்து 08.08.2022 ம் தேதி இப்பணிக்கான Price Bid திறக்கப்பட்டது. மேலும் ஒப்பீடு பட்டியல் (Comparative statement) தயாரிக்கப்பட்டதில் SARAM ENVIRO SERVICES PVT LTD , நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்தை விட 4.94% அதிகமான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்திருந்தனர். மேலும் S R MAN POWER CONSULTANCY நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்தை விட 5.25% அதிகமான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்திருந்தனர். எனவே மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு விகிதத்தை விட 4.94% அதிகமான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள SARAM ENVIRO SERVICES PVT LTD நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.: i) மன்றம் அனுமதிக்கலாம்.

ii) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று SARAM ENVIRO SERVICES PVT LTD நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.203, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.31)**

ஆற்காடு நகராட்சி 8வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ம.சுதா மகேந்திரன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

என் பெயர் ம.சுதா கணவர் பெயர். மோ.மகேந்திரன், இனிவரும் காலங்களில் என்னுடைய பெயர் ம.சுதா மகேந்திரன் என்று இடம் பெற வேண்டும்

**தீர்மான எண்**.204, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.32)**

ஆற்காடு நகராட்சி 16வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.P.பாவை அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

நகராட்சியின் மூலமாக அனுப்பப்படும் அனைத்து தபால்ளிலும் மற்றும் கல்வெட்டுகளிலும் இனிவரும் காலங்களில் எனது பெயருடன் எனது கனவரின் பெயரையும் சேர்த்து ( P. பாவை பழனி) என்று இடம் பெறவேண்டும்

**தீர்மான எண்**.205, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.33)**

இந்நகராட்சிக்கு புதியதாக வாங்கப்பட்ட ஸ்கார்பியோ (Scorpio) வாகனத்திற்கு 2022–2023ஆம் வருடத்திற்குண்டான வாகனக் காப்பீடு செலுத்தி இராணிப்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனப் பதிவு எண்ணை பெறவேண்டி காப்பீட்டு தொகை ரூ.60,216/–யினை United India Insurance Co.Ltd, Ranipet என்ற காப்பீட்டு நிறவனத்தில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) புதியதாக வாகங்கப்பட்ட ஸ்கார்பியோ (Scorpio) வாகனத்திற்கு காப்பீடு செலுத்தி வாகன பதிவு எண்ணை பெற மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) வாகன காப்பீடு தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.239/2022/இ1

**தீர்மான எண்**.206, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.34)**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் கீழ் பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு 2022-2023ஆம் வருடத்திற்குண்டான வாகன காப்பீடு செலுத்த வேண்டி TN73E0155 ஈப்பிற்கு ரூ.12,119/-, TN73E0138 ஈப்பிற்கு ரூ.12199/-, TN73AC3423 இலகு ரக வாகனம் ரூ.19097/-, TN73AC 3454 இலகு ரக வாகனம் ரூ.19097/-, TN73AC3449 இலகு ரக வாகனம் ரூ.19097/-, TN73AB4824Hitachi ரூ.20642/- மற்றும்TN73E0139 ஆட்டோ ரூ.5686/- என மொத்த தொகை ரூ.1,07,857/-யினை United India Insurance co. Ltd Ranipet என்ற நிறுவனத்தில் வருடாந்திர காப்பீட்டு சாந்தா தொகையாக செலுத்த வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வாகன காப்பீடு தொகையினை 2022-2023 வருடத்திற்கு செலுத்த வேண்டியுள்ளதால் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) வாகன காப்பீடு தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2188/2011/எச்1

**தீர்மான எண்**.207, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.35)**

இந்நகராட்சியில் 2021-2022ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் 1.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு பையோகேஸ் பிளாண்ட் இயந்திரத்தில் உள்ள கழிவுநீர் சேமிப்பு தொட்டியில் உள்ள கழிவுகளை லாரி மூலம் அப்புறப்படுத்துதல் பணிக்கு 02.08.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | B.ஹயாதி பீ | 0.50% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | R. ரமணா | 0.25% மதிப்பீட்டினை விட அதிகம் |

அ.கு: 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் B.ஹயாதி பீ ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.50% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்ண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.208, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.36)**

இந்நகராட்சியில் 2021–2022ம் ஆண்டு ICDS திட்டத்தின் கீழ் 2.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்குட்பட்ட ஜானகிராமன் பூங்கா அருகில் உள்ள அங்கன்வாடி மையத்தில் பழுது பராமரிப்பு பணிக்கு 02.08.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | M/s.K.ராஜாராம் அன்ட் கோ | 1.14% மதிப்பீட்டினை விட அதிகம் |
| 2 | ஸ்ரீ வள்ளியமலையான் அன்ட் கம்பெனி | 0.42% மதிப்பீட்டினை விட குறைவு |

அ.கு: 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ வள்ளியமலையான் அன்ட் கம்பெனி ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.42% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்ண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.209, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.37)**

இந்நகராட்சியில் 2021–2022ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் 9.10 இலட்சம் மதிப்பீட்டில் தெருமின் விளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் மின் பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் பணிக்கு 02.08.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | Sri Balaji Electricals | 1.76% மதிப்பீட்டினை விட அதிகம் |
| 2 | Hi Tech Tronics | 0.13% மதிப்பீட்டினை விட குறைவு |

அ.கு: 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Hi Tech Tronics ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்ண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.210, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்**.38)

இந்நகராட்சியில் 2021–2022ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் 9.56 இலட்சம் மதிப்பீட்டில் தெருமின் விளக்கு இயக்குவதற்க தானியங்கி சுவிட்சு (Automatic Timer) சப்ளை செய்தல் பணிக்கு 02.08.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | Hi Tech Tronics | 0.08% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | Sri Balaji Electricals | 0.92% மதிப்பீட்டினை விட அதிகம் |

அ.கு: 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Hi Tech Tronics ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.08% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்ண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.211, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்) பெ.தேவி
நகரமன்ற தலைவர்
ஆற்காடு நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்(பொ)
ஆற்காடு நகராட்சி